# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்.

குரல்: 4 இசை: 9

விலை
25 காசு

கடலூர்-1. தமிழகம்.

## பொறுமை நிறை நிலமே!

வானப் பறவைகளே!-எழில்
வண்ண விளக்குகளே!-உயர்
மானம் பொதிந்தநல்
வாழ்க்கையினை எங்கள்
மாந்தர்க் குரைப்பீரோ?

காட்டு விலங்குகளே!-வன்மை
காழ்த்த மறவர்களே-இந்த
நாட்டினில் வாழ்கின்ற
மாந்தர்க்கும் ஓரிடம்
நல்கி உதவீரோ?

பட்டுடற் பூச்சிகளே!-காற்றில்
பறக்கும் மலரிதழ்காள்!-மனங்
கெட்டுடல் நாறி,
அலைகின்ற மாந்தரின்
கேட்டை விலக்குவிரோ?

தாமரைப் பூக்குளமே!-ஒளி
தாவும் எழில்வளமே!-களி,
காமம், பொருமை,
பகைகொள் முகங்களைக்
கமழச் செய்வாயோ?

தேனுண்ணும் வண்டினமே!-சுவை
தேக்கும்பாட் டாளிகளே!-பொதி
ஊனும் உயிருமாய்
வாழும் சோம்பேறிகள்
உழைக்கச் சொல்வீரோ?

நீந்தும்நல் மீனினங்காள்!-கடல்
நீரின் நிலா, உடுக்காள்!-எங்கள்
மாந்தருள் வாழ்கின்ற
தீய மனங்களை
வந்து விழுங்கீரோ?

பல்லி,தேள், பாம்புகளே!-தீமை
பாய்ச்சும் உயிரினங்காள்!-உங்கள்
இல்லங்கள் தப்பி,எம்
மிடைவந்து வாழ்வாரை
என்றைக்கு மீட்பீரோ?

பொறுமை நிறைநிலமே!-வான்
போர்த்த உருள் உலகே:-நெஞ்சில்
வெறுமையும் சூதும்
வெறுப்பும் மிகுந்தாரை
வெடித்து விழுங்காயோ?

# என் பள்ளிக்கூடம்

சுற்றி யிருக்குமிந் நான்கு சுவர்கட்குள்
இன்பத் தமிழ் படித்தேன்!—அன்பைச்
சொல்லில் விளைத்த முதியவர்பால் இன்பச்
செந்தமிழ்த் தேன் குடித்தேன்!
வற்றியிருக்குங் களர்நிலம் போல், வெறும்
வான வெளியினைப் போல்—நின்ற
வன்னெஞ்சை நன்னெஞ்சா யாக்கி அறிவெனும்
வளந்தனை இங்குப் பெற்றேன்!
பற்றி யிருக்குங் கல்லாமை யெனுமொரு
பாழிருள் நீங்கப் பெற்றேன்!—மனப்
பான்மையும் மேன்மையும் நல்லுளத் திண்மையும்
பாங்குற இங்குக் கற்றேன்!
முற்றி யிருக்குங் கதிரினைப்போல், மழை
மூண்ட முகிலினைப் போல்-உளம்
மொய்க்கும் பயன் நிறைவாகிப் பொழிந்திட
முந்துறப் பாடுகின் றேன்!

சிட்டுக் குருவியைப் போல உரிமையும்
சிற்றெறும்பின் ஒழுங்கும்-ஒரு
சேரக்கற்றேன்! பெரும் இன்பம்பெற்றேன், இந்தச்
சுற்றுச் சுவர்களுக் குள்!
பட்டுப் புழுதரு நற்பயன்போல், உளப்
பாங்குறும் நூற்பயனும்-இந்தப்
பார்தனி லுள்ளவர் யாவரும் ஒன்றெனும்,
பண்பதும் இங்குக் கற்றேன்!
எட்டுணை மேலவர் ஆயினும் கற்கிலார்
என்றும் இழிந்த வரே!-நிலை
எத்துணைத் தாழ்ந்தவர் ஆயினும் கற்றவர்
யாண்டும் உயர்ந்த வரே!
நட்டுவைத்த விதை நற்பயன் காண்டலை
நல்ல தொரு விளைவை-இந்த
நானிலம் வாழ்த்தும்! அறம்வளர்க்கும் என்றன்
நற் பள்ளி வாழியவே!

-துரை-மாணிக்கம்-

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-4. | தி.பி.-௨௦௦௧-மேழம்-ஏப்பிரல்,மே-70 | இசை-9


## பழைய மனமே புதிய உலகம்!

எத்தனைப் பெரிய உலகம்! இதில்தான்
எத்தனை மக்கள்; எத்தனை இனங்கள்!
எத்தனை நாடுகள்! எத்தனை அரசுகள்!
எத்தனை மொழிகள்! எத்தனைத் தோற்றம்!
அத்தனை மக்களின் அமைப்பிலும் உள்ள
வாழ்க்கை நிலைகள் எத்தனை, தெரியுமா?
தாழ்ச்சி என்பதோ ஒருவனுக்கு உயர்ச்சி!
இன்னா தென்பது ஒருவனுக் கினியது!
நல்ல தென்பது தீதுஒரு வனுக்கே!
ஒருபுடை இருளும் ஒருபுடை ஒளியும்
மாறி மாறி இயங்குமண் ணுலகம்!

ஒருநாட்டில் ஒன்று பழைய தென்றால்
பிற நாட்டில் அதுவே புதியதென் கின்றான்.


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நம் நாட்டில் ஒருவர் அறிஞர் என்றால்
பிறநாட்டில் அவரே மாணவர் ஆகிறார்.
நம்நா கரிகம் பிறநாட்டில் பழையது!
நமக்குப் பழைமை பிறர்க்குப் புதுமையே!

பழக்கமும் உடையுமே பண்பா டாகுமா?
வழக்கம் ஒன்றே ஒழுக்கமாய் விடுமா?
நன்றாய் உடுத்துதல், நன்றாய் உண்ணுதல்
என்பதே 'வாழ்க்கை' என்றாகி விடுமா?
அழகிய தலைமயிர், அழகிய உறுப்புகள்,
பழுதிலா உருவம்–இத்தனை இருந்தும்
உழுதிடா உள்ளம் உவர்நிலம் அன்றோ?
'நாகரிகம்' என்பது நல்ல உடைகளா!
'நாகரிகம்' என்பது நன்றாய் உண்பதா?
உள்ளம் என்பதே உரைகல் தம்பி!
உள்ளமே வாழ்க்கை! உள்ளமே ஒழுக்கம்!
ஒருவன் பசித்திட ஒருவன் உண்பதா?
ஒருவன் மாடியில், ஒருவன் தெருவிலா?

எத்தனை அறிவியல் ஏற்றங் காணினும்,
எத்தனைக் கருவிகள் வாழ்க்கையைத் துலக்கினும்
ஒருவனை வீழ்த்தி, ஒருவன் உயர்வதால்
இருநிலம் உயர்ந்தது என்பது சரியா?
மக்களைத் தாழ்த்துதல் மனத்தை அழிப்பதே!
மனத்தை அழிப்பது மக்களை அழிப்பதே!
வலியவன் ஒருவனே வாழத் தக்கவன்;
மெலியவன் என்பவன் வீழத் தக்கவன்,
–என்பதே உலகின் இயற்கை என்றால்
கருவிகள் செய்வதே உலகக் கல்வியாம்!
அறிவியல் எதற்கு? ஆகும் பயனென்?
அன்பும், அருளும் அழிவுக் குழிகளா?
மென்மை யாவையும் அழிப்பதா வாழ்க்கை!
மலர்கள், பெண்கள், வானப் பறவைகள்,
கிளர்வுறும் பூச்சிகள், விலங்குகள் யாவுமே
அழிக்கத் தக்கன ஆகுமேல் உலகம்
வழிவழி யாக வாழ்ந்துகொண் டிருக்குமோ?
எனவே தம்பி; ஏற்றம் என்பது
புனைவும் பெருக்கமும் அன்று
மனமும் வாழ்க்கையும் மலரச் செய்வதே!

-பெருஞ்சித்திரன்.




பெட்டைக் கழுதை
  பிழைத்திருக்கக் கண்டவுடன்
நெட்டை நெடுங்காலே
  நீண்டதொரு மூச்சுவிட்டுக்
கண்கள் மலர்த்தி, யிரு
  காதுகளை ஆட்டிவிட்டுப்
''பெண்களே இப்படித்தான்;
  பேதைத் தனமாக
நல்லுயிரைப் போக்குதற்கு
  நாக்கடிப்பாய்ப் பேசிடுவார்;
வெல்லம் உயிரன்றே;
  ஆனாலும் வீணாகத்
தன்னுயிரை மாய்த்துவிடல்
  தக்கதன்று; துன்பமென்ன
என்றும் இருப்பதுவா?
  இன்றுவரும் நாளைசெலும்;
இன்பமும் அப்படித்தான்!
  எல்லார்க்கும் ஒன்றுதான்!
துன்பில் துவளாமல்
  மேலுந் துணிந்திருந்தால்
இன்பம் எதிர்ந்துவரும்!
  இஃதே உலகவியல்!
முன்புசெய்த தீச்செயலை
  முற்றும் மறந்துவிடு!

ஆர்செய்த நல்வினையோ
அம்மா, பிழைத்துவிட்டாய்!

ஓடையிலே நீரில்லை;
உன்னுயிரும் போகவில்லை

ஏதோ ஒருசெயலுக்
கின்னும் பிழைத்திருப்பாய்!

தீதோ இலை,நன்றே!
தேற்றிக்கொள் உன்மனத்தை!

வீணாய் வருந்தாதே!
வீறுகொள் உள்ளத்தில்;

காணாமற் போனவுன்றன்
கண்மணியைத் தேடிடுவோம்!

மேலேவா" —என்றபடி,
அன்பு மிதந்துவரக்

காலால் தரையறைந்து,
கண்ணால் அழைத்ததுவாம்!

காளை யழைத்தவுரை
கழுதை மனங்கொண்டு,

தோளை மிகத்தாழ்த்தித்
தொங்கும் முகத்தோடு,

நாணம் உயிர்விழுங்க
மெல்ல நடந்துவந்து,

காணவும் வெட்கமுற்றுக்
கண்கள் கவிழ்ந்தபடி

"அண்ணா!இப் பேதையினை
அன்பால் பொறுத்திடுங்கள்!

பெண்ணாய்ப் பிறந்தால்
பெருந்துயரம் வந்தாலும்

தாங்கத்தான் வேண்டுமென்ற
தன்மை தெரியாமல்,

நீங்கிவிட—என்னுரை
நீக்கிவிட எண்ணிவிட்டேன்!

என்பிள்ளை எவ்விடத்தில்
எத்துயரம் கொண்டதுவோ?

என்பும் சதையும்
இருக்குமோ? இல்லையொரு
வல்விலங்கின் வாய்க்கே
வருவிருந்தாய்ப் போனாளோ?
பல்முனையாக் குட்டியவள்
பார்த்திடுவோம்; வாருங்கள்''
–என்றே அழைக்க
இரண்டும் இருங்காட்டுள்
ஒன்றன்பின் ஒன்றாக
ஓரிருகல் சென்றிருக்கும்.
நல்ல இருள்வந்து
நாற்றிசையும் சூழ்ந்ததுகாண்!
மெல்ல நடைதளர்ந்து,
மேலும் இயலாமல்
காளை, கழுதை
இரண்டும் களைப்பாறும்
வேளையிலே எங்கிருந்தோ
வேட்டு வெடித்தவொலி
காடே அதிர்வுறவும்,
காது செவிடுறவும்
ஊடாகப் பாய்ந்துவந்து
நெஞ்சை உலுக்கிற்று!
வேட்டொலியைக் கேட்டு
வெலவெலத்து நிற்கையிலே
கூட்டிலுள்ள ஆவி
குடிபெயர்ந்து போவதுபோல்
ஏறிட்டு வானின்(று)
இடியொன்று வீழ்ந்ததுபோல்
வீறிட்டு அலறும்
அரிமா முழக்கமொன்று
கேட்டிடவே, நெஞ்சம்
கிடுகிடுக்க உள்நடுங்கி,
ஓட்டம் எடுத்தனவே
காளை ஒருதிசையும்



# குட்டிக்கதை

## சம்பளப்பணம்

த. அன்பழகன்,

தி. பி. ௨௦௦௪ இரட்டை. ௧௪.

தம்பி,

திருச்சி.

நீ படித்தாலும் சரி; படிக்காவிட்டாலும் சரி. இவ்வளவு பணம் இதற்கு வேண்டும்; அவ்வளவு பணம் அதற்கு வேண்டும் என்று மட்டும் எழுதாதே. எனக்கென்ன. தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டாகொட்டுகிறது, நீ வேண்டும் போதெல்லாம் விடுத்துவைக்க? இல்லை, 'அமுதசுரபி' போல் 'பணச்சுரபி' ஏதேனும் வைத்திருக்கிறேனா? இல்லையே! பின்னர் எப்படி அனுப்பி வைக்க முடியும்?

தொடக்கத்தில் ''பொத்தகம் வாங்கவேண்டும்' என்று எழுதியிருந்தாய். இருபது உருபா அனுப்பியிருந்தேன். அதற்குப்பின் ''துணிகள் எடுக்க வேண்டும்.'' என்றாய். முப்பது உருபா அனுப்பினேன். அதற்குப்பின் செலவுக்குப் பதினைந்து உருபா அனுப்பியிருந்தேன். இப்போது என்னவென்றால் சம்பளம் கட்டப் பதினைந்து உருபா வேண்டும்'' என்று எழுதியிருக்கிறாய், அதுவும் முப்பது நாட்களுக்குள்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பெண்கழுதை மற்றோர்
திசையும் பிரிந்தனவாம்!
மண்மீதில் வாழ்ந்துவரல்
மாந்தருக்கே துன்பமெனில்,
எண்ணரிய குற்றுயிர்கள்,
ஏதுமற்ற சிற்றுயிர்கள்,
விண்பறவைக் கூட்டம்,
விலங்கெல்லாம் என்செய்யும்?

(தொடரும்)

என் கடை முதலாளியின் கை அவ்வளவு எளிதில் பணப் பெட்டிக்குள் நீளக்கூடியதா? நீளாது. வாய் வேண்டுமானால் நீளும். "என்னப்பா பணமா கேட்கிற? நீ முன்னாலேயே முப்பது தரணுமே; அதை முதல்'ல எப்போ' வேலைசெய்து கழிக்கப்போற? சொல்லு. எதற்குப் பணம்? தம்பிக்குத்தானே! பேசாம' அவனையும் ஒரு கடையில் கிடையில் உட்காரச்சொல்லு'. அப்படியே முன்னுக்கு வந்து விடுவான்." என்று அறிவுரை கூறுவார். கடைசியில் கொடுத்தாலும் கொடுப்பார்; கொடுக்காமலும் இருப்பார். கேட்டுப்பார்க்கலாம் என்றால், அவர் இப்போது இங்கில்லை; மருத்துவமனையில் இருக்கிறார்.

தம்பி, அப்பா இருக்கும்போது நீ வேண்டும் போதெல்லாம் வாங்கிச் செலவு செய்தாய். அதெல்லாம் சரிதான். இப்போது உள்ள நிலையென்ன? அம்மா களையெடுக்கப் போகிறார்கள்; அதனால்தானே நீ களையோடு இருக்கிறாய். அம்மா இன்னமும் நாற்று நடப்போகிறார்கள்; அதனால்தான் நீ, ஓர் உருவத்தோடு நடக்கிறாய். இல்லையா? நான் இன்னும் என்னையே நிலைப்படுத்திக் கொள்ளவில்லை. உனக்கு எப்படி முழுமையாக உதவ முடியும்? சம்பளப்பணம் எப்படிக் கட்டுவாயோ? எனக்குத் தெரியாது. இப்படிக்கு

உனக்கு உதவமுடியாத அண்ணன்,

பூ. முத்தையன்.

## ௨

தி. பி. ௨00௪. இரட்டை. ௩௦.
தஞ்சை.

"அண்ணா, உங்களுக்குத் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு ஒன்றும் கொட்ட வேண்டா. நீங்களும் நான் கேட்கும் போதெல்லாம் கொட்டியதைக் கட்டி அனுப்ப வேண்டா. உங்கள் முதலாளியின் கை பணப்பெட்டிக்குள் நீளவும் வேண்டா. நீங்களும் நீட்ட வேண்டா. என் கையை என்றால் நன்றாக நீட்ட முடியும். நீட்டுவேன். நீட்டிக் காட்டின கதையை வேண்டுமானால் எழுதுகிறேன். படித்துக் கொள்ளுங்கள்.

அம்மா ஒரு மாதமாக 'வேலைக்குச் செல்லவில்லை. காலில் வேலிக்கட்டை குத்திப் புண்ணாகி நடக்க முடியாமல் இருக்கிறார்கள். அதனால்தான் உங்களுக்குப் "பணம் வேண்டும்; பணம் வேண்டும்" என்று எழுதினேன். உறவினரிடம் கேட்கவில்லை; கேட்க விருப்பமுமில்லை.

பத்துநாட்கள் பள்ளிக்கு விடுமுறை போட்டேன். ஒருநாள் தண்ணீர் பாய்ச்சப் போனேன். ஒன்றும் கண்ணீர் சிந்தவில்லை. ஒருநாள் வரப்பு வெட்டப் போனேன்; ஒருநாள் தளைமிதிக்கப் போனேன். இரண்டு நாட்கள் வேலை கிடைக்கவில்லை. நான் மருண்டு போகவில்லை.

மறுநாள் குத்தகைக்காரருடன் சந்தைக்குப் போனேன். கத்தரிக்காய் ஏலம் எடுத்து என்னை விற்றுக்கொடுக்கச் சொன்னார். முப்பது உருபா ஊதியத்திற்கு விற்றுக்கொடுத்தேன், எனக்கு 10 உருபா கொடுத்தார். இப்படி வீட்டுச் செலவுக்குப்போக எஞ்சியதைச் சேர்த்து வந்தேன். சம்பளப்பணம் சேர்ந்தது; கட்டிவிட்டேன்.

"சம்பளப்பணம் எப்படிக் கட்டுவாயோ எனக்குத் தெரியாது" என்று எழுதியிருந்தீர்களே, எப்படிக் கட்டினேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இங்ஙன்,
தங்கள் உதவியை வேண்டா
பூ. கரிகாலன்.

## ௩

தி. பி. ௨௦௦௧. கடகம்-௧௦.
திருச்சி.

அன்புள்ள தம்பி,

உன் மடல் கிடைத்தது. சம்பளம் கட்டிவிட்டதாக எழுதியிருந்தாய். எனக்கு இப்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? எனக்கு நன்றாகத் தெரியும், நீ மான உணர்ச்சி உள்ளவன் என்று. "தன்கையே தனக்குதவி" என்ற பொன்மொழியை உணர வேண்டும் என்பதற்காகவே என்னால் பணம் அனுப்ப முடிந்த போதும், வேண்டுமென்றே அனுப்ப முடியாது என்று எழுதினேன்.

நான் என் மடலில் குறித்திருந்தபடி என் கடை முதலாளி அப்படி ஒன்றும் பொருளே பொருளென்று மருள்பவர் அல்லர். உதவக் கூடியவர் தாம். அவருடைய எண்ணப்படிதான் உனக்கு முன்னர் மடல் எழுதினேன். அதற்கு நீ எழுதிய விடையைப் பார்த்து ஒரு புறம் வருந்தினேன். என்றாலும் உன் தன்மானத்தையும், உறுதியையும் பார்த்து மகிழ்ந்தேன். காலப்போக்கில் எங்கே அவற்றை நீ கைவிட்டு விடுவாயோ என்று எண்ணி, நீ எழுதிய மடலை உனக்கே இத்துடன் திருப்பி அனுப்பியுள்ளேன். அதை ஒவ்வொருநாளும் ஒரு முறை எடுத்துப் படித்துவா.

எனக்குச் சம்பளம் இன்று தந்தார்கள். அம்மாவின் செலவுக்கென உருபா இருபது அனுப்பியிருக்கிறேன். பெற்று அவர்களிடம் கொடு.

இப்படிக்கு,
என்றும் உன் அண்ணன்,
பூ. முத்தையன்.



# பெரியோர் கதை!

## சேக்சுபியர் வரலாறு-ஒருதிருத்தம்.

**மு. மகிழரசன்.**

தமிழ்ச்சிட்டு குரல் 4. இசை 8-இல் வெளியாகி உள்ள சேக்சுபியர் வரலாறு, ஆண்டுக்குறிப்புகள், பிறகுறிப்புகள் யாவும் பொருந்துவனவாய் இல்லை. (இதனை எழுதிய அன்பர் சேயிளங்கண்ணர் இக்குறிப்புகளை எங்ஙனம் பெற்றார் என்பது வியப்பாக உள்ளது) எனக்கு நேரமின்மையால் சில இன்றியமையாக் குறிப்புகளைச் சுருக்கமாக எழுதுகின்றேன். சிறார்க்கும் பிறர்க்கும் இன்றியமையாமை நோக்கியே இதனை இடையறா இன்னல்களுக்கிடையேயும் எழுதுகின்றேன்.

வில்லியம் சேக்சுபியர்–பிறப்பு-26 ஏப்பிரல் 1564.

தந்தை–சான் சேக்சுபியர், தாய்–மேரிஆர்டன். சேக்சுபியர் 13 அகவை அடைகையில் அவர் தந்தைக்குத் தம் தொழில்துறையில் இழப்புநேர்ந்தமையால் சேக்சுபியர் பள்ளியினின்று நிறுத்தப்பட்டார்.

திருமணம்–அகவை ௧௮-ஆண்டு 1582. மனைவி ஆன்னிஅதாவே (Anne Hathaway) அவர் இலண்டனுக்குச் செல்ல நேர்ந்ததற்குக் காரணம் வறுமையே. 1583-இல் சூசன்னா என்ற முதற் குழந்தையும், அடுத்த ஆண்டே (1584), ஏம்னத்து, (Hamnet) சூடித்து (Judith) என்ற இரட்டை மகவுகளும் பிறந்தமையால் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அவரை இலண்டனுக்குப் பொருள்தேட விரட்டிற்று. அவர் செலவுக்கு இன்னோர் காரணமும் கூறப்படுகின்றது. இளமையின் குறும்புத்தனத்தால் சேக்சுபியர், திரு. தாமசு லூசி என்பவரின் தோட்டத்து மான் ஒன்றினைக் கொன்று விட்டமையால் அத்தொல்லையிலிருந்து தப்பவே இலண்டனுக்குச் சென்றுவிட்டாராம்.

இலண்டனில் நாடக அரங்குகளில் இழிநிலைத் தொழில்களில் தொடங்கிப் பின் தொண்டனாக, நடிகனாக, பழைய நாடகங்களைப்

# முடிகிறதா பாருங்கள்.

1. உங்களிடம் எட்டுக் கோலிக்குண்டுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். அவை மூன்றும் பார்ப்பதற்கு ஒரே தோற்ற முடையனவாக இருந்தாலும், அவற்றில் ஒன்றுமட்டும் மற்ற இரண்டைவிட எடையில் மிகுந்தது. ஒரு நிறைகோலை (தராசை) இரண்டுமுறை மட்டுமே பயன்படுத்தி எடை மிகுந்துள்ள கோலிக் குண்டைத் தனியே பிரித்தெடுக்க உங்களால் முடியுமா பாருங்கள். முடியாவிட்டால் 12–ஆம் பக்கம் பாருங்கள்.

–ப- திருநாவுக்கரசு, பெங்களூர்.

2. ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் அனைத்தும் வர வேண்டும். அவற்றைக் கூட்டியோ, கழித்தோ விடை நூறு வருமாறு செய்ய வேண்டும். எல்லா எண்களையும் பயன்படுத்த வேண்டுவதுடன், ஒரே எண்ணை இரண்டு முறை பயன்படுத்தக் கூடாது. முடிகிறதா பாருங்கள். முடியாவிட்டால் 12–ஆம் பக்கம் பாருங்கள்.

–ப, ச. கிருட்டிணசாமி, எருமைநாயக்கன்பட்டி.

---

[முன்பக்கத் தொடர்ச்சி]

புதிய வடிவில் அமைப்புவனாக, பாவலனாக. நாடகப் புலவனாக, நாடகவியல் மேலாளனாக இவ்வாறு பல தொழில்களை மேற்கொண்டு முன்னேறியுள்ளார்.

1592-இல் அவர் நாடகப்புலமையின் புகழ், அந்நாளில் இலண்டனில் புகழ் பெற்றிருந்த நாடக அறிஞர்கள் மார்லாள், பீல், நாசே, இலாட்சு போன்றூர்க்கும் எதிராக ஓங்கி நிற்கத் தொடங்கியது. 1595.இல் சேக்சுபியர் செல்வம் மிகுதியால் குளோப்பு, பிளாக், பிரையர்சு போன்ற மிகப்பெரும் அரங்குகளின் பங்காளர் (Shareholder) என்ற நிலையை எய்தி உள்ளார். 1596-இல் தம் ஊரில் புது மனையும் நிலங்களும் வாங்கித் தம் மனைவி மக்களை ஏந்துடன் வாழ வகைசெய்துள்ளார். இலண்டனில் மொத்தம் 23-ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் எழுதிய ,வீனசும் அடோனைசும்' மற்றும் 'உலுக்ரசின் (கற்பு) இழிவு' இரண்டும் 1593, 1594-ஆம் ஆண்டுகளில் வெளியாயின. அவர் எழுதிய பெரும்பாலான துன்பியல் நாடகங்கள் 1601-1611-ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டவையாம். 1611-ஆம் ஆண்டில் தம் நாடகவியல் வாழ்வுத் தொடர்பைத் துண்டித்துக் கொண்டார். எஞ்சிய 5-ஆண்டுகளைத் தம் ஊரில் ஓய்வில் கழித்தார். 1516-ஆம் ஆண்டு ஏப்பிரல் 23-இல் உயிர் நீத்தார்.

அவர் நடித்த நாடகங்கள்: (1) பென் சான்சன் எழுதிய 'தம்தம் உவகையில் ஒவ்வொரு மாந்தனும்' (2) தாம் எழுதிய நாடகங்களில் ஏம்லத்து (Hamlet) இதில் வரும் ஓர் அலகையாக நடித்துள்ளார். 'நீங்கள் விரும்புவதுபோல்' (As You Like It) இதில் வரும் ஆதாம் (Adam) ஆக நடித்துள்ளாராம். O

# பயன் மொழிகள்.

இராம. செந்தாழை, இராசிபுரம்.

பெண்கள் நாணலுக்கு இணையானவர்கள். சிறு காற்றுப் பட்டாலும் அசைந்து கொடுப்பார்கள்; ஆனால் பெரும் புயல் அடித்தாலும் ஒடிய மாட்டார்கள். —வாட்லி.

அறிவு தனது பாதையைத் தானே அமைத்துக்கொள்கிறது. தனது ஒளிச்சுடரைத் தானே கையிலேந்திச் செல்கிறது. —வில்மாட்டு.

ஒரு முட்டாள் கடலில் கல்லை எறிந்தால், அந்தக் கல்லை நூறு அறிவாளிகள் சேர்ந்தாலும் வெளியே எடுக்க முடியாது. —பல்கேரியப் பழமொழி.

கையில் மதுப்புட்டியை வைத்திருக்கும் இளைஞன் எண்ணிப் பார்க்க வேண்டியவை இரண்டு. அஃதாவது மதுப்புட்டியை ஒழிப்பதா? அல்லது தன்னை ஒழிப்பதா? —அறிஞர். புருச்சு.

தன்னைத்தானே அடக்கியாள்வதற்கு ஆற்றல் அற்றவன், ஆயிரத்தெட்டுக் கெட்ட பழக்கங்களை உடையவன். —தால் சுதாய்.

தன் உள்ளத்தை மூடியிருக்கும் கதவுகளைத் திறந்து விட்ட மாந்தன், உலகத்தின் எந்த மூலை முடுக்கிலும் சூரியச் சுடரைப் பெறுகிறான். —பாரசிக அறிஞர் ஒருவர்.

வாழ்க்கை வாழ்வது ஒருகலை. நீங்கள் விரும்புவதை ஓயாமல் செய்து உழைத்துக்கொண்டு இன்பமா இல்லையா என்று எண்ணிப் பார்ப்பதற்கு நேரமில்லாமல் வாழ்வதே இன்ப வாழ்க்கைக்கு வழியாகும். —பர்னார்டு.

கயவர், முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை. —சர்ச்சில்.

உலகமே ஒரு பெரும் திருட்டுக்கூடம். திங்கள் சூரியனிடமிருந்து வெளிச்சத்தைத் திடுகிறது; சூரியனும், கடலிலிருந்து தண்ணீரைத் திருடுகிறான்; உலகமே திருடுகிறது. —சேக்சுபியர்.

பணமிருந்தால் கடவுளையும் அசைத்து விடலாம்; இல்லாவிட்டாலோ மாந்தன்கூட அசையமாட்டான். —பீகார் பழமொழி.

உலகத்தில் ஓர் அறிவாளி இருந்தால் அவரை அறியும் வழி ஒன்றுண்டு; எல்லா அறிவிலிகளும் சேர்ந்துகொண்டு அவருக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். –சுவிஃப்ட்

மின்மினிப்பூச்சி உட்காரும் பொழுது மின்னுவதில்லை. மாந்தன் சோம்பேறி ஆகும்போது அவனது அறிவு என்ற சுடர் அணைகிறது. –யாரோ.

ஒழுக்கம் என்பது போர்க்களம்; அதில் வாழ வேண்டுமெனில் ஓயாமல் நம் மனத்துடன் போராட வேண்டியிருக்கிறது. –உருசோ

உயர்ந்த மாந்தன் என்பவன் தன் சொற்களில் சிக்கனமாகவும் அமைதியாகவும் இருப்பான். தன் நடத்தையில் உண்மையாக இருப்பான். –கன்ஃபூசியசு.

நம்முடைய மனப்பாங்கை அறியும் இயல்பில்லாத புல்லறிவாளர்களுக்கு, நாம் ஓர் உதவி செய்தால் அது பாறையின் மீது போட்ட மண்கலம்போல் தூள் தூளாகச் சிதறிவிடும். –ஔவையார்.

## விடைகள்.

1. முதலில் நிறைகோலின் இருதட்டுகளிலும் மூன்று மூன்று குண்டுகளை வையுங்கள். அவை எடையில் சமமாக இருந்தால் எஞ்சிய இரண்டையும் தனித்தனியாக இரண்டு தட்டுகளிலும் வையுங்கள். ஏதாவது ஒருதட்டு கட்டாயம் தாழும். அத்தட்டில் உள்ள கோலியே எடை மிகுந்தது. நிறைகோலை இரண்டுமுறை மட்டுமே பயன் படுத்தினோம்.

நிறைகோலின் இரு தட்டுகளிலும் மூன்று மூன்று குண்டுகளை வைக்கும்போது அவை எடையில் சமமில்லையானால், எந்தத்தட்டு கீழே தாழ்ந்ததோ அத்தட்டில் உள்ள குண்டுகளைத் தனியே எடுத்து மற்ற (3+2) கோலிகளைத் தொலைவில் வையுங்கள். ஏனெனில் அவற்றில் கட்டாயம் எடை மிகுந்துள்ள குண்டு இருக்காது. தனியே உள்ள மூன்றில் இரண்டை எடுத்து இரு தட்டுகளிலும் போடுங்கள். அவற்றில் ஏதாவது ஒருதட்டு தாழ்ந்தால் அதில் உள்ளதுதான் மிகுந்த எடையுள்ளது. அவை இரண்டும் சமமானால் கையில் உள்ள ஒன்றுதான் எடை கூடினது. இப்பொழுதும் இரண்டுமுறையே நிறைகோலைப் பயன்படுத்தினோம்.

2. விடை: $13+2+54+98-67=100$.

# இந்திய நாட்டு மொழிகள்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மிகுதியாய்ப் பேசப்படுகின்ற மூன்று மொழிகளின் பட்டியல் வருமாறு:—

*(1961-ஆம் ஆண்டுக் கணக்குப்படி.)*

| தமிழ்நாடு:— | விழுக்காடு |
|---|---|
| தமிழ் — | 83.17 |
| தெலுங்கு — | 9.99 |
| கன்னடம் — | 2.81 |

| ஆந்திரா:— | |
|---|---|
| தெலுங்கு — | 85.97 |
| உருது — | 7.75 |
| இராசத்தானி — | 1.62 |

| மைசூர்:— | |
|---|---|
| கன்னடம் — | 65.17 |
| தெலுங்கு — | 6.68 |
| உருது — | 8.63 |

| கேரளா | |
|---|---|
| மலையாளம் — | 95.04 |
| தமிழ் ... | 3.12 |
| கொங்கணி — | 0.46 |

| வடபைதிரம்:— (உ. பி.) | |
|---|---|
| இந்தி — | 85.39 |
| உருது — | 10.70 |
| கும்மவானி — | 1.39 |

| நடுப்பைதிரம்:— (ம. பி) | |
|---|---|
| இராசத்தானி — | 56.49 |
| இந்தி — | 33,32 |
| பீலி — | 4.13 |

| பீகார்:— | |
|---|---|
| இந்தி — | 44.30 |
| பீகாரி — | 35.39 |
| உருது — | 8.93 |

| மாராட்டிரம்:- | விழுக்காடு |
|---|---|
| மராத்தி — | 76 55 |
| உருது — | 6.89 |
| இந்தி — | 3.11 |

| குசராத்து:— | |
|---|---|
| குசராத்தி — | 90.50 |
| உருது — | 2.88 |
| இந்தி — | 2.42 |

| பஞ்சாப்:— | |
|---|---|
| இந்தி - | 56.64 |
| பஞ்சாபி | 41.09 |
| உருது - | 1.26 |

| காசுமீரம்:— | |
|---|---|
| காசுமீரி - | 54.42 |
| பஞ்சாபி - | 27.48 |
| பகாரி - | 6.84 |

| ஒரிசா:— | |
|---|---|
| ஒரியா - | 82.31 |
| குய் - | 2.92 |
| தெலுங்கு - | 2.24 |

| மே. வங்காளம்;— | |
|---|---|
| வங்காளி - | 84.28 |
| இந்தி - | 5.43 |
| சாந்தாலி - | 3.27 |

| அசாம்:— | |
|---|---|
| அசாமி - | 57.14 |
| வங்காளி - | 17.60 |
| இந்தி - | 4.41 |

முன்னிதழ்த் தொடர்ச்சி

# பெருக்கலில் சுருக்கம்.

-பாவை-நடவரசன்.

(கா) ஈரெண்களிலும் ஒன்ரும் நிலை 5-ஆக வந்து, பத்தாம் நிலை எண்கள் வெவ்வேருக இருக்குமானல், முதற்கண் ஒன்ரும் நிலை எண்களைப் பெருக்கி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர், பத்தாம் நிலை எண்களைப் பெருக்கி, மீண்டும் அதே பத்தாம் நிலை எண்களைக் கூட்டி இரண்டால் வகுத்து வந்ததை வைத்துக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

விளக்கம்:

(ஈ) $95 \times 75$

$5 \times 5 = 25$ = ஒன்ரும் நிலை பெருக்கல்

$9 \times 7 = 63$ = பத்தாம் நிலை பெருக்கல்

$\frac{9+7}{2} = 8$ = பத்தாம் நிலை கூட்டலில் பாதி.

∴விடை:— 63-ஐயும் 8-ஐயும் கூட்டி 25ஐ அவற்றின் வலப் புறத்தில் சேர்த்திடல் வேண்டும்.

$63 + 8 = 71$

ஆகவே விடை $= 7125$

(உ) $85 \times 35$:—

$8 \times 3 = 24$ பத்தாம் நிலை பெருக்கல்

$\frac{8+3}{2} = 5.5$ பத்தாம் நிலை கூட்டலில் பாதி

$29.5$

$5 \times 5 = 25$

∴விடை: = 2975.

(ஊ) $45 \times 95$:—

$4 \times 9 + \frac{1}{2} \times 13 :: 42\frac{1}{2} = 42.5$

25

4275 விடை.

மேற்கண்ட மூன்று முறைகளிலிருந்தும் என்ன அறிகிரும் தெரியுமா? 10-ஆம் நிலையுள்ள இரண்டு எண்களையும் பெருக்கி, அவற்றின் கூட்டுத் தொகையிற் பாதியைக் கூட்டி, வரும் எண்

னுக்குப்பின்னால் 25-ஐச் சேர்த்துவிட வேண்டும். இதனைத்தெளிவுறத் தெளிந்தோம்.

(கி) 11-ஆல் பெருக்குதல்:

பெருக்கப்படும் எண் இருநிலை உடையதாய் இருக்க வேண்டும். அந்த இருநிலை எண்களைக் கூட்டினால் 9-க்குள்ளிருக்க வேண்டும். அப்படி இருந்தால், அதனை 11-ஆல் பெருக்குவது மிக எளிது.

பெருக்கப்படும் எண்ணின் ஒன்றும் பத்தாம்நிலை எண்களைக் கூட்டி, அந்த இருநிலை எண்களுக்கிடையில் எழுதிவிடல் வேண்டும். அதுதான் அந்த எண்ணை 11-ஆல் பெருக்கிக் கிடைக்கும் விடையாகும்.

விளக்கம்:—

(எ) $72 \times 11$

பெருக்கப்படும் எண்களின் (72) கூட்டுத்தொகை } $=7+2=9$

9-ஐ பெருக்கப்படும் எண்ணின் இருநிலைக்கிடையில் எழுதுதல் } $=7\ 9\ 2$

[$53 \times 11$:—5 கூட்டல் $3=8$; ∴விடை 583.
$25 \times 11$:—2 கூட்டல் $5=7$; விடை 275
$42 \times 11$:—4 கூட்டல் $2 :: 6$; விடை 462]

(கீ) பெருக்கப்படும் எண்ணின் இருநிலை எண்களையும் கூட்டினால் 9-க்கு மேல் வந்தால் கீழ்க்கண்ட முறையில் போடுதல் வேண்டும். இதுவும் மிக எளிதான முறையாகும்.

பெருக்கப்படும் எண்ணின் ஒன்றும் நிலையே விடையின் ஒன்றும் நிலை ஆகும். விடையின் பத்தாம்நிலை, ஒன்றும் நிலையையும் பத்தாம் நிலையையும் கூட்டிவந்த தொகையின் ஒன்றும் நிலையாகும். விடையின் நூறும்நிலை, பெருக்கப்படும் எண்ணின் ஒன்றும் பத்தாம்நிலை எண்களின் கூட்டுத்தொகையின் பத்தாம்நிலை எண்ணோடு, பெருக்கப்படும் எண்ணின் பத்தாம்நிலை எண்ணை வைத்துக் கூட்டுவதாகும்.

விளக்கம்:—

(ஏ) $95 \times 11$—1045

5 விடையின் ஒன்றும்நிலை 5

5 9 15 விடையின் பத்தாம் நிலை 4
1 9 10 விடையின் ஆயிரம் நூறும் நிலை 10
∴விடை 1045

(கு) எந்த எண்ணையும் 11-ஆல் பெருக்கும் முறை:—

37563X11

மேற்கண்ட கணக்கினை எப்படிச் செய்தோமோ அப்படியே இதனையும் செய்தல் வேண்டும். கீழே செய்திருக்கும் முறையை ஊன்றிக் கவனிக்கவும்.

37563X11 413193

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 3 | விடையின் | ஒன்றும்நிலை | 3 |
| | 3 | 6 | 9 | ,, | பத்தாம்நிலை | 9 |
| | 6 | 5 | 11 | ,, | நூறும்நிலை | 1 |
| 1 | 5 | 7 | 13 | ,, | ஆயிரத்தின் நிலை | 3 |
| 1 | 7 | 3 | 11 | ,, | பத்தாயிரத்தின் நிலை | 1 |
| | 1 | 2 | 4 | ,, | இலக்கத்தின் நிலை | 4 |

∴விடை 413193

(கூ) பெருக்கும் எண்ணைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பெருக்கும் முறை:—

கணக்கு:—

755X244

செய்யும் முறை:—

இங்கே கொடுத்திருக்கும் பெருக்கும் எண்ணாகிய 244-ஐ 4, 24 ஆகப் பிரித்துக்கொள்ளலாம். ஏனெனில் 4-ஆனது 24-இன் ஒரு பகுதியாகும் (4X6 24)

முதலில் 4-ஆல், பெருக்கப்படும் எண்ணைப் பெருக்கி எழுதிவிடல் வேண்டும். அதனை (க) என வைத்துக் கொள்வோம். இப்பொழுது, பெருக்கப்படும் எண்ணை (745) 24-ஆல் பெருக்காமல், (க)ஐ 6-ஆல் பெருக்கி முன்னைய பெருக்குத்தொகையின் பத்தாம் நிலைக்கு நேர் கீழாகத் தொடங்கி இடக்கைப்புறமாக எழுதிக்கொள்ளல் வேண்டும். அதனை (கா) என வைத்துக் கொள்வோம். (க)வையும் (கா)வையும் கூட்டினால், விடை சரியாக வரும்.

745X24,4
2989 .. ...(க)X6 ∴24
1788.........(கா)
181780 விடை.

# தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குச் சென்ற சொற்கள்.

(பாவாணர் நூல்களினின்று தொகுத்தவர்:—
செங்கிப்பட்டி அர. இராமையன்:)

மெல்(லுதல்) Mill, Molar Muller, Meal.
மைந்து (திறன்) Might
வட்டி(பனைநார்க்கூடை) Vat
வடங்கு (To fade, fatigued) fatigue
வண்டு (காற்று) Wind
வலி (மை) Valour, Valient, Valid, Valedication etc.
வழி Via
வழுகு Fallacy
வள்ளம் (கிண்ணம்) Bowl
வள்வு, வளவு வளைவு Volt, Vault, Wallow Volume etc.
வளை Ply
வறு Fry
வாடு Fade
வாய் Way
வார்(த்தல்) Pour
வாரணம் (கடல்) Marine Marina etc.
விக்கல் Hiocup, hiccough
விசுக்கு (விரைத்து) Whisk
விட்டி, விட்டில் Beetle
விடலை(எருது) Veal (flesh of (colf)
விழி Vide, Super vise, Vigil
விழி (தெரிவு) Wit
விழி (அறிவு) Wise
விழு Fall
விழை (விரும்பு) Philo logy Philan thropy
விழாசு Flog, Flack
விளி(த்தல்) Peal, appeal, repeal
விறைத்தல் Freeze
வீங்கு Wax
வீண் Vain
வெட்டம்(வெட்டவெளிச்சம்) Photos (light)
வெஃகு Beg
வெல் Win
வெரு, வெருவு Fear, revere
வெருக்கு Fright
வெறி Furore
வெறு, வெறும் Mere
வேளை While
வேறு Varry Derivatives Various Variegated, Variant, Variation, Variety, Vaiorrum etc.

(முற்றும்)

# பூத்த தாமரைப் புதுமுகம்.

பூத்த தாமரைப் புதுமுகம்—உன்னைப்
பார்த்திடப் பார்த்திடக் குளிருதென் அகம்—நீ (பூத்த)

கோத்திட்ட முல்லைச் சரத்தினைப் போல
குமிழ்நகை சிந்திடும் பற்களி னாலே
வார்த்த எழில்மிகு ஒளிநிறை, வெள்ளம்
வந்திங்குப் பாய்ந்ததால் செழித்ததென் இல்லம்! –(பூத்த)

ஆடி அசைந்திடும் செம்பொன்னின் தேர்,நீ!
அன்னைக்கும் தந்தைக்கும் பெரும்புகழ் சேர்,நீ!
ஓடிக் குதித்திடும் இளமானின் கன்றே,
ஓதுதல் மறவாதே! என்செல்வக் குன்றே! –(பூத்த)

குத்திட்டு வீழ்ந்திடும் நுரைபொங்கும் நீரில்
குதித்துப் புரண்டிடும் விழிக்கெண்டைச் சீரில்,
ஒத்திட்டுப் பாய்ந்த தடி,என்றன் ஆவி;
ஓடிடும் பின்வந்த தே,மனம் தாவி! –(பூத்த)

அப்பாவுக் கோ செல்லப் பிள்ளை,நீ கிளியே!
அம்மாவுக் கென்றும்,நீ ஒளிநல்கும் விழியே!
தப்பாமல் பள்ளிக்கு நாள்தோறும் செல்வாய்;
தவறாமல் ஒவ்வொரு தேர்விலும் வெல்வாய்! –(பூத்த)

பாவாடை விரித்தாடும் பசும்பச்சை மயில்,நீ!
பண்ணோடு தமிழ்ப்பாடி மயலேற்றுங் குயில், நீ!
பூவோடு நெய்நாறுங் கருங்குழல் பின்னிப்
பொலிகின்றாய்! மகிழ்கின்றேன் வருநாளை எண்ணி! –(பூத்த)

தண்டை குலுங்கிட நீபோகும் போதில்,
தாலாட்டுப் பாடிய நாள்விழும் காதில்,
கொண்டை குலுங்கிட நீவளர்ந் தந்நாள்
கொம்பொன்றைப் பற்றுவாய் எனக்கது பொன்னாள்! -(பூத்த)

-துரை-மாணிக்கம்-

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.